# APTET – Paper- IIA– 2024

## M & S_TAMIL MEDIUM_02.03.2024_S1

1. One of the following methods possesses the characteristic of 'Objectivity' at the highest level.
   1. Observation method
   2. Interview method
   3. Case study method
   4. Experimental method

   கீழ்க்கண்டவற்றில் புறவயத்தன்மை அதிக அளவில் உள்ள முறை

   1. உற்றுநோக்கல் முறை
   2. நேர்காணல் முறை
   3. தனியாள் பதிவு முறை
   4. பரிசோதனை முறை

2. One of the following is not related to the scope of Educational psychology
   1. Methods of Learning
   2. Educational philosophy
   3. Development of thinking
   4. Educational statistics

   கல்வி உளவியல் எல்லைக்குத் தொடர்பில்லாத ஒன்று

   1. கற்றல் முறைகள்
   2. கல்வி தத்துவவியல்
   3. சிந்தனை வளர்ச்சி
   4. கல்வி புள்ளியியல்

3. Fill in the blank

Development = $f$ (maturation × _____)

1. Intelligence
2. Imitation
3. Learning
4. Personality

வெற்றிடத்தை நிரப்புக.

வளர்ச்சி = $f$ (முதிர்வு நிலை × _____)

1. நுண்ணறிவு
2. போலச் செய்தல்
3. கற்றல்
4. ஆளுமை

4. The following statement is not related to cross – sectional approach

1. The same sample will be observed for a long period
2. Short term observation
3. It won't examine the cause and effect relationship between variables
4. Variables are observed several times at specific intervals

கீழ்க்கண்டவற்றில் குறுக்கு வெட்டு அணுகுமுறையுடன் தொடர்பில்லாத கூற்று

1. ஒரே விதமான மாதிரியை நீண்ட காலம் உற்றுநோக்குவர்
2. குறுகிய கால உற்றுநோக்கல்
3. மாறிகளுக்கிடையே காரண விளைவை சோதிக்காது
4. குறிப்பிட்ட இடைவேளைகளில் மாறிகள் பலமுறை உற்றுநோக்கப்படும்

5. Which of the following theory is known as 'constructivist approach'.

1. Self-concept theory
2. Piaget's Cognitive development
3. Kohlberg's moral development theory
4. Thorndike's Trial and error theory

கீழ்க்கண்டவற்றில் உருவாக்க அணுகுமுறை என்று அழைக்கப்படும் கோட்பாடு

1. சுயக்கருத்துக் கோட்பாடு
2. பியாஜேவின் அறிவுசார் வளர்ச்சி
3. கோல்பெர்க்கின் அறநெறி வளர்ச்சிக் கோட்பாடு
4. தாரண்டைகின் முயன்று தவறிக் கற்றல் கோட்பாடு

6. One of the following does not belong to the tests regarding DAT (Differential Aptitude Test)

1. Concrete Reasoning
2. Abstract Reasoning
3. Verbal Reasoning
4. Spatial Relations

கீழ்க்கண்டவற்றில், வேறுபட்ட மனநாட்டச் சோதனை

(DAT) யுடன் தொடர்பில்லாத ஒன்று

1. பருப்பொருள் பகுத்தறிவு
2. கருத்தியல் பகுத்தறிவு
3. ஒலித் தொடர்பான பகுத்தறிவு
4. இடத் தொடர்புகள்

7. One of the following aspects of aptitudes helps to guide the selection of courses for one's future

1. Scholastic aptitude
2. Aesthetic aptitude
3. Differential aptitude
4. Vocational aptitude

கீழ்க்கண்ட மனநாட்டக் கூறுகளில் ஒன்று எதிர்காலத்தில் ஒரு நபர் தேர்ந்தெடுக்கக் கூடிய பயிற்சிகளுக்கு தொடர்பான வழிகாட்டுதல் செய்வதற்கு துணைபுரிகிறது

1. கல்வி தொடர்பான மனநாட்டம்
2. அழகுணர் மனநாட்டம்
3. வேறுபட்ட மனநாட்டம்
4. தொழில் தொடர்பான மனநாட்டம்

8. Chaplin's dictionary of psychology defined Adjustment as

"The _______ in the activities of an individual in over coming obstacles and fulfilling needs"

1. Intelligence
2. Variations
3. Learning
4. Conflicts

சாப்ளினின் உளவியல் அகராதி, " தடைகளை கட்டுப் படுத்தி தேவைகளை நிறைவேற்றுவதற்கு தனிநபரின் செயற்பாடுகளில்........ ஐ தகவமைப்பு'' என்று விளக்குகிறது

1. நுண்ணறிவு
2. வேற்றுமைகள்
3. கற்றல்
4. போராட்டங்கள்

9. Find the odd pair

1. L.L. Thurston – 7 types of mental abilities
2. Gardener – 8 types of intelligence
3. Spearman – three factor theory
4. Thorndike – multiple factor theory

கீழ்க்கண்டவற்றில் பொருந்தாத இணை

1. எல்.எல். தர்ஸ்டன் - 7 வகையான மனத்திறன்கள்
2. கார்டினர் - 8 வகையான நுண்ணறிவு
3. ஸ்பியர்மன் - முக்காரணிக் கோட்பாடு
4. தாரண்டைக் - பலகாரணிக் கோட்பாடு

10. The defense mechanism where the person's painful experiences are forgotten by sending them to the unconscious mind is known as

1. Displacement
2. Sublimation
3. Repression
4. Regression

வலிமிக்க அனுபவங்களை நனவிலி நிலைக்கு அனுப்புதல் மூலம் மறத்தல் என்பது இவ்வகையான தற்காப்பு நடத்தையைச் சேர்ந்தது

1. இடமாற்றம்
2. மடைமாற்றம்
3. ஒடுக்குதல்
4. பின்னடைவு

11. Find out the correct statement with regard to learning

1. Learning is a process, not the product
2. Learning means only product, not the process
3. Learning means temporary change
4. No relation between learning and maturity

கற்றல் பற்றிய சரியான கூற்று

1. கற்றல் என்பது ஒரு செயல்முறை, விளைவு அல்ல
2. கற்றல் என்பது விளைவு மட்டுமே, செயல்முறை அல்ல
3. கற்றல் என்பது தற்காலிக மாற்றம்
4. கற்றலுக்கும் முதிர்நிலைக்கும் தொடர்பு இல்லை

12. A student to choose either Maths or Biology as his course of study where he is interested in photography. This comes under the following type of conflict

1. Approach - Approach
2. Approach - Avoidance
3. Avoidance - Avoidance
4. Double approach - Avoidance

புகைப்படத்துறை மீது விருப்பமுள்ள மாணவன் கட்டாயமாக விருப்பம் இல்லாத கணிதம் அல்லது உயிரியலில் ஏதோ ஒன்றினைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. இது கீழ்க்கண்ட வகையுடன் அல்லது போராட்டத்தின் கீழ்வரும்

1. அணுகுதல் – அணுகுதல்
2. அணுகுதல் – விலகுதல்
3. விலகுதல் – விலகுதல்
4. இரட்டை அணுகுதல் – விலகுதல்

13. The individual factor that influences learning

1. Aptitude
2. Home environment
3. Curriculum
4. Difficulty level of the item of learning

கற்றலின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் தனிப்பட்ட காரணி

1. மன நாட்டம்
2. வீட்டுச் சுற்றுச்சூழல்
3. கலைத்திட்டம்
4. கற்றல் கூறின் கடின நிலை

14. Which one of the following belongs to affective domain

1. Imitation
2. Manipulation
3. Analysis
4. Valuing

கீழ்கண்டவற்றில் உணர்வுசார் களத்தைச் சேர்ந்தது எது?

1. போலச் செய்தல்
2. கையாளுதல்
3. பகுத்தாய்வு
4. மதிப்பிடுதல்

15. According to Maslow's 'theory of hierarchy of needs', the highest level of need

1. Physiological need
2. Recognition need
3. Safety need
4. Self-actualization

மாஸ்லோவின் "தேவைகளின் படியமைப்புக் கோட்பாடு" படி, உயர்மட்டத் தேவை

1. உடற்கூற்றுத் தேவை
2. அங்கீகாரத் தேவை
3. பாதுகாப்புத் தேவை
4. தன்உணர்தல் தேவை

16. The first stage of concept formation

1. Comparison with past experiences
2. Identification of common characteristics in past experiences
3. Acquiring sensations through sense organs
4. Expressing common characteristic in the form of symbols

பாடக்கருத்து உருவாக்கத்தின் முதல் படிநிலை,

1. கடந்த அனுபவங்களுடன் ஒப்பிடுதல்
2. கடந்த அனுபவங்களின் பொதுவான பண்புகளை அறிதல்
3. புலனுறுப்புகளின் வழியாக உணர்வுகளைப் பெறுதல்
4. சாதாரண பண்புகளை குறியீடு வடிவில் வெளிப்படுத்ததல்

17. The following is not the characteristic of "Perception"

1. Perception depends on Sensations
2. Perception involves meticulous observation
3. Perception can be directly ascertained
4. Perception involves attention and thinking

கீழ்க்கண்டவற்றில் 'புலன் உணர்வு' பண்பு அல்லாதது

1. புலன் உணர்வு, உணர்வுகளின் மீது ஆதாரப்பட்டுள்ளது
2. புலன் உணர்வில் கூர்ந்த உற்றுநோக்கல் இருக்கும்
3. 'புலன் உணர்வினை' நேரடியாக உறுதி செய்யலாம்
4. 'புலன் உணர்வில்'கவனமும் சிந்தனையும் ஈடுபட்டிருக்கும்

18. 'Tachistoscope' instrument is used for the assessment of

1. Personality
2. Attitude
3. Span of attention
4. Intelligence

'டாசிஸ்டோஸ்கோப்' கருவி இதை மதிப்பிடுவதில் பயன்படுத்தப்படுகிறது

1. ஆளுமை
2. மனப்பான்மை
3. கவன வீச்சு
4. நுண்ணறிவு

19. The type of transfer of learning occurs when a ball badminton player starts learning shuttle badminton

1. Positive
2. Negative
3. Zero
4. Bilateral

பால் பேட்மிண்டன் கற்றுக்கொண்ட நபர் ஷட்டில் பேட்மிண்டன் கற்கும்போது காணப்படும் கற்றல் மாற்ற வகை

1. நேர்முக
2. மறைமுக
3. பூஜ்ஜிய
4. இருபக்க

20. Identify the wrong pair

1. Instructional theory - Bruner
2. Classical conditioning - Skinner
3. Insightful learning - Kohler
4. Cognitive development - Piaget

தவறான இணையைக் கண்டறியவும்

1. பயிற்சிக் கோட்பாடு - புரூனர்
2. பண்டைய ஆக்கநிலையிறுத்தம் - ஸ்கின்னர்
3. அகக்காட்சி மூலம் கற்றல் - கோஹ்லர்
4. அறிவுசார் வளர்ச்சி - பியாஜே

21. The term ‘group dynamics’ was introduced by

1. Koffka
2. Bandura
3. Kurt Lewin
4. Carl Rogers

‘குழு இயக்கவியல்’ என்னும் சொல்லை அறிமுகப் படுத்தியவர்

1. கோஃப்கா
2. பாண்டூரா
3. கர்ட் லெவின்
4. கார்ல் ரோஜர்ஸ்

22. Curriculum refers to

1. Curricular
2. Curricular + co curricular
3. Co curricular + Extra curricular
4. Curricular + Co curricular + Extra curricular

‘கலைத்திட்டம்’ என்பது

1. பாடம் தொடர்பானது
2. பாடம் + துணைப்பாடம் தொடர்பானது
3. துணைப்பாடம் + பாடம் தொடர்பற்றது
4. பாடம் + துணைப்பாடம் + பாடம் தொடர்பில்லாதது

23. Etiquette to be followed while using internet

1. Netiquettes
2. Online formalities
3. Online Regulations
4. Net formalities

இணைய தளத்தைப் பயன்படுத்தும் போது பின்பற்ற வேண்டிய பண்பாடு விவகாரங்கள்

1. நெறிமுறைகள்
2. இணையவழி சம்பிரதாயங்கள்
3. இணையவழி ஒழுங்குமுறைகள்
4. வலையமைப்பு சம்பிரதாயங்கள்

24. Total Chapters, and parts in NEP - 2020

NEP - 2020 ல் உள்ள மொத்த அத்தியாயங்கள் மற்றும் பாகங்களின் எண்ணிக்கை

1. 5, 20
2. 8, 25
3. 27, 4
4. 15, 5

25. Expand 'DIKSHA'

'DIKSHA' ன் விரிவாக்கம்

1. Digital Infrastructure for Experience Sharing
2. Digital Infrastructure for Knowledge Sharing
3. Digital Intelligence for Experience Sharing
4. Digital Intelligence for Knowledge Sharing

26. The main objective of National Mission of F.L.N

1. to enhance Vocational skills
2. for reading & writing
3. for Adult Education
4. for primary literacy and numeracy skills

F.L.N - என்னும் தேசிய திட்டத்தின் முக்கிய நோக்கம்

1. தொழில் திறன்களை உயர்த்துதல்
2. படித்தல், எழுதலுக்காக
3. முதியோர் கல்விக்காக
4. தொடக்க எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுத் திறன்களுக்காக

27. The maximum storage capacity of ‘CD’

‘CD’ யின் அதிகபட்ச சேமிப்புத் திறன்

1. 1 GB
2. 700 MB
3. 10 GB
4. 1 TB

28. ‘LED’ stands for

‘LED’ என்பதன் விரிவு

1. Light Emitting Diode
2. Light Emitting Display
3. Light Explore Display
4. Light Explore Digital

29. Minimum Attendance for ‘Amma Vodi’ scheme eligibility

‘அம்ம ஒடி’ (தாயின் மடி) திட்டத்திற்கு தகுதிபெற இருக்கவேண்டிய வருகை சதவீதம்

1. 70%
2. 75%
3. 80%
4. 60%

30. Author of the book “Civilization and Progress”

1. Gandhiji
2. Radha Krishnan
3. Ambedkar
4. Tagore

“நாகரீகமும் வளர்ச்சியும்’’ என்னும் நூலின் ஆசிரியர்

1. காந்தியடிகள்
2. இராதாகிருஷ்ணன்
3. அம்பேத்கர்
4. தாகூர்

31. ‘அசதி’ என்னும் சொல்லின் பொருள்

1. வளர்ச்சி
2. உலகம்
3. சோர்வு
4. சொத்து

32. ‘ஆறு’ என்னும் சொல்லின் இருபொருள்

1. வீடு, தொகை
2. படி, எண்
3. நதி, எண்
4. இருப்பிடம், படி

33. ‘கவிஞாயிறு’ என்னும் அடைமொழி பெற்றவர்

1. சுத்தானந்த பாரதி
2. தாராபாரதி
3. சுரதா
4. பாரதிதாசன்

34. ‘தேசியம் காத்த செம்மல்’ எனப் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரை பாராட்டியவர்

1. இராஜாஜி
2. நேதாஜி
3. திரு.வி.க
4. திலகர்

35. ‘குழந்தை வெளியே போய்விட்டது’ என்பது இவ்வகை வழக்கு

1. மங்கலம்
2. குழூஉக்குறி
3. இடக்கரடக்கல்
4. மரூஉ

36. ஆசிரியரிடம், ‘இந்த கவிதையின் பொருள் யாது?’ என்று மாணவர் கேட்டல் இவ்வகை வினா

1. ஏவல் வினா
2. அறியா வினா
3. அறிவினா
4. ஐயவினா

37. ‘வானொலி கேட்டு மகிழ்ந்தனர்’ – இவ்வகை ஆகுபெயர்

1. கருத்தாவாகு பெயர்
2. கருவியாகு பெயர்
3. பண்பாகு பெயர்
4. காரியவாகு பெயர்

38. பொருந்தாத குற்றியலுகரத்தைக் கண்டுபிடி.

1. பாக்கு
2. பாட்டு
3. மூழ்கு
4. பற்று

39. தேடிப் பார்த்தான் – எவ்வகைத் தொடர்

1. எழுவாய்த் தொடர்
2. வினையெச்சத் தொடர்
3. வினைமுற்றுத் தொடர்
4. வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்

40. வல்லினம் மிகா இடத்தைக் கண்டுபிடி.

1. இரட்டைக் கிளவி
2. உவமைத் தொகை
3. ஓரெழுத்து ஒரு மொழி
4. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

41. பொருத்துக.

| நூல் | ஆசிரியர் |
|---|---|
| 1. அழகின் சிரிப்பு | - அ. வைரமுத்து |
| 2. நட்புக்காலம் | - ஆ. மலாலா |
| 3. கரும்பலகை யுத்தம் | - இ. அறிவுமதி |
| 4. தண்ணீர் தேசம் | - ஈ. பாரதிதாசன் |

1. 1 - இ, 2 - ஈ, 3 - ஆ, 4 - அ
2. 1 - ஈ, 2 - அ, 3 - ஆ, 4 - இ
3. 1 - ஈ, 2 - இ, 3 - ஆ, 4 - அ
4. 1 - இ, 2 - அ, 3 - ஈ, 4 - ஆ

42. உறுதியாக கால்பதித்து
உங்கள் குறிக்கோளை நோக்கி நடக்கையில்
நீங்கள் நல்லவர் - என்று கூறியவர்

1. அப்துல் கலாம்
2. கலீல் கிப்ரான்
3. தாராபாரதி
4. மேத்தா

43. நுட்பமாக சிந்தித்து அறிவது

1. நூலறிவு
2. நுண்ணறிவு
3. பட்டறிவு
4. சிற்றறிவு

44. வில்வாள் – இச்சொல்லுக்குரிய இலக்கண குறிப்பு

1. எண்ணும்மை
2. உரிச்சொல்
3. முற்றும்மை
4. உம்மைத்தொகை

45. பகுபத இலக்கணத்தில் பகுதி, சந்தி, இடைநிலை முதலியவற்றில் ஏற்படும் மாற்றம் ............. எனப்படும்.

1. சந்தி
2. விகாரம்
3. சாரியை
4. விகுதி

46. ‘அறம்நாணத்’ – இச்சொல்லை அலகிடு.

1. நேர், நிரை, நிரை
2. நேர், நேர், நேர்
3. நிரை, நேர், நேர்
4. நேர், நிரை, நேர்

47. கீழ்க்கண்டவற்றை கவனி.

A. வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம்.

B. மருதம் ஆறு பெரும் பொழுதுகள் கொண்டது.

இவற்றுள் எது சரி என தீர்மானிக்கவும்.

1. A சரி, B தவறு
2. A சரி, B சரி
3. A தவறு, B தவறு
4. A தவறு, B சரி

48. 'போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கோடி

வாரல் என்பனபோல் மறித்துக்கை காட்ட'

– இச்செய்யுளில் பயின்று வந்துள்ள அணி

1. தற்குறிப்பேற்ற அணி
2. தீவக அணி
3. தன்மை அணி
4. நிரல்நிறை அணி

49. திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார். – செய்வினைத் தொடரை செயப்பாட்டு வினைத் தொடராக மாற்றுக.

1. திருவள்ளுவரால் திருக்குறள் இயற்றப்பட்டது
2. திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது
3. திருவள்ளுவர் திருக்குறள் இயற்றினார்
4. திருக்குறளை திருவள்ளுவர் இயற்றினார்

50. 'பாங்கறிந்து' – இலக்கணக் குறிப்பு எழுதுக

1. இரண்டாம் வேற்றுமைத் தொகை
2. மூன்றாம் வேற்றுமைத் தொகை
3. நான்காம் வேற்றுமை தொகை
4. ஐந்தாம் வேற்றுமை தொகை

51. கீழ்க்காணும் செய்யுளைப் படித்து, வினாவிற்கு விடையளி.

திங்கள் பிறப்பினுக்கே – இருள்
தேசங்கள் வாழ்த்துரைக்கும்
கங்குல் பிறப்பினுக்கோ – இளங்
காதலர் வாழ்த்துரைப்பர்!

திங்கள் என்பதன் பொருள்

1. சூரியன்
2. நட்சத்திரம்
3. நிலவு
4. மழை

52. கீழ்க்காணும் செய்யுளைப் படித்து, வினாவிற்கு விடையளி.

திங்கள் பிறப்பினுக்கே – இருள்
தேசங்கள் வாழ்த்துரைக்கும்
கங்குல் பிறப்பினுக்கோ – இளங்
காதலர் வாழ்த்துரைப்பர்!

காதலர் எப்பொழுது வாழ்த்து கூறுவர்?

1. பகல்
2. நண்பகல்
3. இரவு
4. எற்பாடு

53. கீழ்க்காணும் உரைநடையைப் படித்து, வினாவிற்கு விடையளி.

திரு.பெ.சுந்தரம் பிள்ளை 1855 ஆம் ஆண்டு ஆலப்புழையில் பிறந்தவர். இவர் மனோன்மணீயம் என்ற தாம் இயற்றிய நூலால் நினைவு கூரப்படுகிறார். திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை, மதுரைக் காஞ்சி முதலிய சங்க நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

திரு.பெ.சுந்தரம் பிள்ளை இயற்றிய நூல் யாது?

1. மனோன்மணீயம்
2. நெல்நல்வாடை
3. திருமுருகாற்றுப்படை
4. மதுரைக்காஞ்சி

54. கீழ்க்காணும் உரைநடையைப் படித்து, வினாவிற்கு விடையளி.

திரு.பெ.சுந்தரம் பிள்ளை 1855 ஆம் ஆண்டு ஆலப்புழையில் பிறந்தவர். இவர் மனோன்மணீயம் என்ற தாம் இயற்றிய நூலால் நினைவு கூரப்படுகிறார். திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை, மதுரைக் காஞ்சி முதலிய சங்க நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

சங்க நூல்களை இம்மொழியில் மொழி பெயர்த்தார்

1. வடமொழி
2. கன்னடம்
3. ஆங்கிலம்
4. தெலுங்கு

55. மேதினி – சொல் பொருள்

1. ஞாயிறு
2. உலகம்
3. கதிரவன்
4. திங்கள்

56. சேர்த்து எழுதுக : தமிழ் + எங்கள்

1. தமிழேங்கள்
2. தமிழ்எங்கள்
3. தமிழெங்கள்
4. தமிழிங்கள்

57. பிரித்து எழுதுக : செம்பயிர்

1. செம்மை + பயிர்
2. செ + பயிர்
3. செம் + பயிர்
4. செம்பி + பயிர்

58. எதிர்ச்சொல் : அரசன் x

1. அரசி
2. வேந்தன்
3. கோ
4. மகராசி

59. வல்லின எழுத்துகள்

1. ங, ஞ, ண, ந, ம, ன
2. க, ச, ட, த, ப, ற
3. ய, ர, ல, வ, ழ, ள
4. க, ங, ச, ஞ, ட, ண

60. சரியான அகரவரிசையை காண்

1. செலவு, சேட்டை, சந்து, சோலை
2. மங்கை, மீன், மேரி, மைனா
3. தொண்டு, தேன், தவளை, துணை
4. கும்பல், கண், கொடை, கோடை

61. How would you refuse your neighbour's request for permission to use your new mobile phone?

Choose your response from the following.

1. Sorry, it is not possible. I want to present it to my friend.
2. You are not a good man. So, I don't give it to you.
3. Thank you very much!
4. It doesn't matter.

62. Choose the sentence that can be used to give a suggestion.

1. I'd love to.
2. Oh, that's a good idea!
3. Hearty congratulations!
4. We'd better go to a movie.

63. Choose the option that should be included at the top right hand side of a formal letter.

1. recipient's address
2. sender's address
3. date
4. salutation

64. The primary purpose of a biographical sketch is:

1. to entertain the reader with anecdotes
2. to capture the essence of someone's life in a concise manner.
3. to provide a detailed account of a person's entire life without facts.
4. to analyze the psychological motivations of the subject.

65. Choose the correctly punctuated sentence.

1. What’s come over you, master? he asked.
2. “What’s come over you, master,” he asked.
3. What’s come over you master? he asked
4. “What’s come over you, master?” he asked.

66. <u>Trains do not</u> / <u>run</u> / <u>very fastly</u> / <u>on this track</u>.

A B C D

Choose the part that has a grammatical error.

1. A
2. B
3. C
4. D

67. Choose the suffix that suits to get the adjectival form of the word ‘beauty’

1. ful
2. full
3. fully
4. ness

68. The word ‘deplorable’ has stress on:

1. The first and the third syllables
2. the second syllable
3. the third syllable
4. the first syllable

69. Choose the meaning of the idiom ‘at a loss’.

1. to do it intentionally
2. not knowing what to do.
3. to make someone angry.
4. to take advantage.

70. Why don’t you _______ your ideas on paper?

Choose the option that fits the blank.

1. set up
2. set in
3. set out
4. set down

71. Choose the mis – spelt word out of the given options

1. tingles
2. vibration
3. resonences
4. intriguing

72. Choose the option that can be used as a one – word substitute for “one who spends too much”.

1. spendthrift
2. theist
3. linguist
4. mercenary

73. You really gave me a <u>fright</u> when you crept up behind me like that.

Choose the synonym of the word 'fright'

1. comfort
2. soothe
3. startle
4. solace

74. Siva Subramania Iyer was not <u>perturbed,</u> nor did he get angry with his wife.

Choose the right pair of opposite words of the word 'perturbed'.

1. disturbed - worried
2. rattled - pacified
3. tranquilized - soothed
4. discomposed - confused

75. Choose the sentence with the correct use of articles

1. Children play the cricket.
2. The children play cricket.
3. Children play cricket.
4. The children the play the cricket.

76. She had always been bad ______ languages.

Choose the preposition that fits the blank.

1. over
2. at
3. with
4. in

77. Fire and water had damaged the desk before the author found it.

In the above sentence 'had damaged' describes:

1. near future
2. future
3. earlier past
4. unreal past

78. Gathergold is arriving tomorrow.

The above sentence indicates:

1. past time
2. future time
3. present time
4. discontinued past.

79. Someone asked, "Why has thief left the vest behind?"

Choose the reported speech of the sentence above.

1. Someone asked who had the thief left the vest behind.
2. Someone asked why the thief had left the vest behind.
3. Someone asked why has the thief left the vest behind?
4. Someone asked why if the thief had left the vest behind?

80. Elections to the Lok Sabha _______ every five years.

Choose the option that completes the sentence meaningfully.

1. are held by
2. is hold by
3. were hold to
4. are held

81. There ______ a lot of people in the park.

Choose the verb that fits the blank.

1. is
2. isn’t
3. was
4. were

82. Identify the noun clause from the following.

1. I will not go until he arrives
2. Come when you like.
3. I know the girl who won the prize
4. I know you have great regard for me.

83. Choose the interjection that shows ‘hesitation!’

1. Ev!
2. Oh!
3. Ah!
4. Oho!

84. Choose the word that is a noun from the following.

1. humble
2. blunt
3. impolite
4. datum

85. His father was a high school teacher. He was an avid reader of English literature.

Identify the true statement about the sentences given below.

1. Both are complex Sentences
2. Both are in present tense
3. Bothe the sentences can be combined as a single sentence using ‘and’
4. Both are not simple sentences.

86. The tour guide was _____ informative that we did not need to read our guide book.

Choose the word that fits the blank.

1. neither
2. so
3. either
4. in spite of

87. She was unable to attend the party ________ her marriage engagement.

Choose the correct phrasal preposition that fits the blank.

1. in addition to
2. due to
3. in case of
4. in place of

88. May I use your mobile phone?

The above sentence indicates:

1. making a suggestion
2. expressing possibility
3. giving permission
4. taking permission

89. Read the following passage.

Even researchers are finding that introverts make better leaders than extroverts for the simple reason that they are more likely to listen and pay attention to what other people are saying. By taking a backseat, introverted leaders encourage others to suggest ideas, contribute actively and take initiative, thus increasing morale and motivation.

As stated in the passage, introverted leaders contribute to increasing morale and motivation by:

1. dominating conversations and ideas
2. being outgoing and charismatic
3. encouraging others to suggest ideas and take initiative
4. socializing and networking effectively

90. Read the following passage.

Even researchers are finding that introverts make better leaders than extroverts for the simple reason that they are more likely to listen and pay attention to what other people are saying. By taking a backseat introverted leaders encourage others to suggest ideas, contribute actively and take initiative, thus increase morale and motivation.

Introverts make better leaders because they are

1. interested
2. attentive
3. attention - seeking
4. alluring

91. The smallest composite number is

**மிகச்சிறிய பகு எண்**

1. 4
2. 3
3. 2
4. 1

92. Additive Identity

**கூட்டல் சமனி**

1. −1
2. 0
3. 1
4. −a

93. General form of a rational number

1. p/q, p and q are integers, $q \neq 0$
2. p/q , p and q are integers, $q = 0$
3. q/p, p and q are integers, $q \neq 0$
4. p/q, p and q are whole numbers, $q = 0$

**ஒரு விகிதமுறு எண்ணின் பொது வடிவம்**

1. p/q, p **மற்றும்** q **என்பவை முழுக்கள்,** $q \neq 0$
2. p/q , p **மற்றும்** q **என்பவை முழுக்கள்,** $q = 0$
3. q/p, p **மற்றும்** q **என்பவை முழுக்கள்,** $q \neq 0$
4. p/q, p **மற்றும்** q **என்பவை முழுக்கள்,** $q = 0$

94. Which of the following is a FALSE statement

**கீழ்க்கண்டவற்றில் <u>மெய்யற்ற</u> கூற்று**

1. $\log_a xy = \log_a x + \log_a y$
2. $(a^m)^n = a^{mn}$
3. $\frac{a^m}{a^n} = \frac{a^n}{a^m}$
4. $\log_a x^m = m.\log_a x$

95. $A \subset B$ then $A \cap B =$

$A \subset B$ **எனில்** $A \cap B =$

1. $\phi$
2. A
3. B
4. $A \cup B$

96. The portion of a cake is not possible to eat

**ஒரு கேக்கின் இப்பாகத்தை தின்பதற்கு சாத்தியமில்லை**

1. 30%
2. 50%
3. 100%
4. 120%

97. Profit or Loss is calculated on

1. Cost price
2. Selling price
3. Discount
4. Marked price

இலாபம் அல்லது நஷ்டமானது இதன் மீது கணக்கிடப்படுகிறது

1. வாங்கிய விலை
2. விற்ற விலை
3. தள்ளுபடி
4. குறித்த விலை

98. An angle of $98^\circ$ is known as ____

1. Reflex angle
2. Right angle
3. Obtuse angle
4. Acute angle

$98^0$ கோண அளவை இவ்வாறு அழைப்பர்

1. பின்வளைவு கோணம்
2. செங்கோணம்
3. விரிகோணம்
4. குறுங்கோணம்

99. The sum of exterior angles of a regular polygon

ஒரு ஒழுங்கான பலகோணத்தின் வெளிக்கோணங்களின் கூடுதல்

1. $90^0$
2. $180^0$
3. $360^0$
4. $400^0$

100. Number of independent measurements to construct a quadrilateral uniquely

ஒரு நாற்கரத்தை வரைய தேவையான தனித்த அளவீடுகளின் எண்ணிக்கை

1. 5
2. 4
3. 3
4. 1

101. The famous Pythagoras theorem is also known as

1. Thales Theorem
2. Euclids Theorem
3. Bhaskara Theorem
4. Baudhayan Theorem

புகழ்பெற்ற பிதாகரஸ் தேற்றமானது இப்பெயரிலும் அழைக்கப்படுகிறது

1. தேல்ஸ் தேற்றம்
2. யூக்ளிட் தேற்றம்
3. பாஸ்கரா தேற்றம்
4. பௌதயான் தேற்றம்

102. $a+\left[\frac{\sum f_i u_i}{\sum fi}\times h\right]$ is the formula for

1. Mode
2. Median
3. Mean
4. Range

$a+\left[\frac{\sum f_i u_i}{\sum fi}\times h\right]$ என்பது இதற்கான சூத்திரம்

1. முகடு
2. இடைநிலை
3. கூட்டு சராசரி
4. வீச்சு

103. In general, this will be taken on X-axis when frequency polygon is drawn independently

1. Classes
2. Class mid values
3. Frequencies
4. Cumulative frequencies

பொதுவாக, நிகழ்வெண் பலகோணத்தை வரையும் போது X - அச்சின் மீது இதை எடுத்துக்கொள்வோம்.

1. வகுப்புகள்
2. வகுப்பு மைய மதிப்புகள்
3. நிகழ்வெண்கள்
4. குவிவு நிகழ்வெண்கள்

104. $(l+m)^2 - (l-m)^2 =$

1. 0
2. $2l$m
3. $l^2$+m$^2$
4. $4l$m

105. Area of a Trapezium

1. 2 (l+b) sq.units
2. lbh sq.units
3. $\frac{1}{2}$ab sq.units
4. $\frac{1}{2}$h (a+b) sq.units

சரிவகத்தின் பரப்பளவு

1. 2 (l+b) சதுர அலகுகள்
2. lbh சதுர அலகுகள்
3. $\frac{1}{2}$ab சதுர அலகுகள்
4. $\frac{1}{2}$h (a+b) சதுர அலகுகள்

106. $\left(\pi\, rl + \pi\, r^2\right)$ is the formula for

1. T.S.A of a sphere
2. Volume of a sphere
3. C.S.A. of a cone
4. T.S.A. of a cone

$\left(\pi\, rl + \pi\, r^2\right)$ எனும் சூத்திரம் இதற்கானது

1. கோளத்தின் மொத்தள பரப்பளவு
2. கோளத்தின் கன அளவு
3. கூம்பின் வளைதள பரப்பளவு
4. கூம்பின் மொத்தள பரப்பளவு

107. In a sector $\frac{x^0}{360^0} \times 2\pi \mathrm{r}$ represents

1. Area
2. Circumference
3. Length of the arc
4. Diameter

ஒரு வட்டகோண பகுதியில் $\frac{x^0}{360^0} \times 2\pi \mathrm{r}$ என்பது இதனை குறிக்கிறது

1. பரப்பளவு
2. பரிதி(சுற்றளவு)
3. வில்லின் நீளம்
4. விட்டம்

108. The volume of the largest right circular cone that can be cut out of a cube whose edge is 7cm.

1. 89.83 cm
2. 100 cu.cm
3. 89.83 sq.cm
4. 89.83 cu.cm

7 செ.மீ பக்க அளவைக் கொண்ட கனச்சதுரத்திலிருந்து வெட்டி எடுக்கக்கூடிய மிகப்பெரிய நேர்வட்ட கூம்பின் கனஅளவு

1. 89.83 செ.மீ.
2. 100 க.செ.மீ.
3. 89.83 ச.செ.மீ.
4. 89.83 க.செ.மீ.

109. The perimeter of a regular pentagon is 100cm. The length of its each side is

1. 20cm
2. 15cm
3. 10cm
4. 5cm

ஒரு ஒழுங்கான ஐங்கோணத்தின் சுற்றளவு 100 செ.மீ. எனில் அதன் ஒவ்வொரு பக்க நீளம்

1. 20 செ.மீ.
2. 15 செ.மீ.
3. 10 செ.மீ.
4. 5 செ.மீ.

110. A die is thrown once. The probability of getting a Prime Number is

ஒரு பகடையானது ஒருமுறை உருட்டும்போது பகா எண் கிடைப்பதற்கான நிகழ்தகவு

1. $\frac{2}{6}$
2. $\frac{1}{2}$
3. $\frac{3}{2}$
4. 1

111. The point (0,–4) lies on

1. positive X- axis
2. negative X- axis
3. positive Y- axis
4. negative Y- axis

புள்ளி (0, − 4) ன் இடம்

1. மிகை X – அச்சு
2. குறை X – அச்சு
3. மிகை Y – அச்சு
4. குறை Y – அச்சு

112. The slope of line joining (0,0) and ($\sqrt{3}$,3)

(0,0) மற்றும் ($\sqrt{3}$,3) ஆகிய புள்ளிகளை இணைக்கும் கோட்டின் சாய்வு

1. 3
2. $\sqrt{3}$
3. $\frac{1}{3}$
4. $1/\sqrt{3}$

113. Which of the following is NOT a trigonometric identity

**கீழ்க்கண்டவற்றில் திரிகோணமிதி முற்றொருமை அல்லாதது**

1. $\text{Sin}^2\theta + \text{Cos}^2\theta = 1$
2. $\text{Sec}^2\theta - \tan^2\theta = 1 \text{ for } 0 \le \theta \le 90^0$
3. $\text{C}o\text{sec}^2\,\theta - \text{S}ec^2\theta = 1$
4. $1 + \text{Cot}^2\theta = \text{Cosec}^2\theta \text{ for } 0 \le \theta \le 90^0$

114. Sec A (1-SinA) (SecA + tanA) =

1. 1
2. 0
3. $\dfrac{1}{\text{CosA}}$
4. tan A

115. The author of " Siddanta Siromoni" book which consists of 4 parts like the popular "Leelavati Ganitham"

1. Srinivasa Ramanujan
2. Brahma Guptha
3. Aryabhatta
4. Bhaskaracharya II

புகழ்பெற்ற 'லீலாவதி கணிதம்' போன்ற நான்கு பாகங்களை கொண்ட "சித்தாந்தசிரோன்மணி" புத்தகத்தை எழுதியவர்

1. சீனிவாச இராமானுஜன்
2. பிரம்ம குப்தா
3. ஆர்யபட்டா
4. பாஸ்கராச்சார்யா II

116. As Leibnitz stated ‘Music is modern internal practice of arithmetic without knowing that behaving with numbers’ this is

1. Utilitarian value
2. Moral Value
3. Aesthetic Value
4. Disciplinary Value

லீப்னிட்ஜ் கூற்றுப்படி, ‘எண்களுடன் நாம் நடந்துக் கொள்வது தெரியாமல் நடக்கும் எண்கணிதத்தின் நவீன அகப்பயிற்சியே இசை ஆகும்’. இது

1. பயன்பாட்டு மதிப்பு
2. அறநெறி மதிப்பு
3. அழகுணர் மதிப்பு
4. ஒழுக்க மதிப்பு

117. Deductive method from Generalisation to specific is introduced by

1. Comenius
2. Armstrong
3. John Dewey
4. David Horsburg

பொதுவானவற்றிலிருந்து குறிப்பிட்டவற்றிற்கு

‘தொகுத்தறிதல் முறை’ யை அறிமுகப்படுத்தியவர்

1. காமினியஸ்
2. ஆர்ம்ஸ்ட்ராங்
3. ஜான் டூயி
4. டேவிட் ஹோர்ஸ்பெர்க்

118. Generally, the percentage of learning by 'writing while seeing' in 'Multi Sensor Approach' is

'பல் புலனுறுப்பு அணுகுமுறை' யில் 'பார்த்துக்கொண்டே எழுதுதுல்' மூலம் சாதரணமாக கற்கும் சதவீதம்

1. 30%
2. 50%
3. 70%
4. 90%

119. The proposal to start mathematics clubs in the schools was initiated by

1. 1835 Macauley's minutes
2. 1952 Secondary Education Commission
3. 1986 National Policy on Education
4. 1946 University Education Commission

பள்ளிகளில் கணிதக் கழகத்தை தொடங்கவேண்டும் என்று முதன் முதலில் கூறியது

1. 1835 மெக்கலே கல்வி முறை
2. 1952 இடைநிலை கல்விக் குழு
3. 1986 தேசிய கல்விக் கொள்கை
4. 1946 பல்கலைகழக கல்விக் குழு

120. X class Public Examinations belongs to the following type

1. Formative Evaluation
2. Summative Evaluation
3. Diagnostic Evaluation
4. Progresstic Evaluation

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுகள் இந்த வகையை சேர்ந்தவை

1. உருவாக்க மதிப்பீடு
2. தொகுப்பு மதிப்பீடு
3. குறையறி மதிப்பீடு
4. முன்னேற்ற மதிப்பீடு

121. The motion of a ball along the ground is

1. Rotational motion
2. Rectilinear motion
3. Rectilinear and Rotational motion
4. Periodic motion

தரையில் பந்தின் இயக்கம்

1. சுழல் இயக்கம்
2. நேர்கோட்டு இயக்கம்
3. நேர்கோட்டு மற்றும் சுழல் இயக்கம்
4. கால ஒழுங்கு இயக்கம்

122. A block of wood is kept on a table top. The mass of wooden block is 5 kg and its dimensions are 40 cm × 20 cm × 10 cm. Find the pressure exerted by the wooden block on the table top with its sides of dimensions 20 cm × 10 cm. ($g = 9.8\ m/s^2$)

ஒரு மரத்துண்டு, மேசையின் மீது வைக்கப்படுகின்றது. அம்மரத்துண்டின் நிறை 5 கி.கி. மற்றும் அதன் அளவுகள் 40 செ.மீ. ×20 செ.மீ. ×10 செ.மீ. எனில் 20 செ.மீ. ×10 செ.மீ.
அளவுகளுடைய மரத்துண்டு மேசையின் மீது அமைந்திருக்கும் போது, மேசையின் மீது அம்மரத்துண்டினால் செயல்படுத்தப்படும் விசையைக் கணக்கிடுக. ($g = 9.8\ m/s^2$)

1. $612.5 Nm^{-2}$
2. $612.5 Nm^{2}$
3. $2450 Nm^{2}$
4. $2450 Nm^{-2}$

123. Sound can travel through

1. vacuum
2. solids, liquids and gases
3. only solids and liquids
4. only vacuum and gases

ஒலி இதன் மூலம் பயணிக்க முடியும்

1. வெற்றிடம்
2. திட, திரவ மற்றும் வாயுக்கள்
3. திட மற்றும் திரவங்களில் மட்டும்
4. வெற்றிடம் மற்றும் வாயுக்களில் மட்டும்

124. Select the correct match of following groups (X) and (Y)

| **Group (X)** | **Group (Y)** |
|---|---|
| i. Absolute refractive index | a. $n_1 \sin i = n_2 \sin r$ |
| ii. Relative refractive index | b. $n = c / v$ |
| iii. Snell's law | c. $\frac{\text{thickness of slab}}{\text{thickness of slab - vertical shift}}$ |
| iv. Refractive index of a glass slab | d. $n_{21} = {}^{v_1}/_{v_2} = {}^{n_2}/_{n_1}$ |

குழு (X) மற்றும் குழு (Y) லிருந்து சரியான இணையை தேர்ந்தெடுக்கவும்.

| **குழு (X)** | **குழு (Y)** |
|---|---|
| i. சார்பிலா முழு ஒளிவிலகல்எண் | a. $n_1 \sin i = n_2 \sin r$ |
| ii. ஒப்பு ஒளிவிலகல் எண் | b. $n = c / v$ |
| iii. ஸ்நெல் விதி | c. $\frac{\text{பலகையின் தடிமன்}}{\text{பலகையின் தடிமன் – செங்குத்து நகர்வு}}$ |
| iv. கண்ணாடி பலகையின் ஒளிவிலகல் எண் | d. $n_{21} = {}^{v_1}/_{v_2} = {}^{n_2}/_{n_1}$ |

1. i – b, ii – d, iii – a, iv – c
2. i – a, ii – b, iii – c, iv – d
3. i – c, ii – d, iii – b, iv – a
4. i – d, ii – c, iii – a, iv – b

125. The unit of magnetic flux density is

1. Weber
2. Tesla
3. Newton / m$^2$
4. Newton / m$^3$

காந்தப்பாய அடர்த்தியின் அலகு

1. வெபர்
2. டெஸ்லா
3. நியூட்டன்/ மீ$^2$
4. நியூட்டன்/ மீ$^3$

126. This is NOT a member of the solar system

1. A constellation
2. A satellite
3. An Asteroid
4. A Comet

பின்வருவனவற்றுள் சூரியக் குடும்பத்தின் அங்கம் அல்லாதது

1. ஒரு விண்மீன் கூட்டம்
2. ஒரு துணைக்கோள்
3. ஒரு சிறுகோள்
4. ஒரு வால் நட்சத்திரம்

127. The impurities present in the ore is called

1. Gangue
2. Flux
3. Slag
4. Mineral

தாதுவில் உள்ள அசுத்தங்களை இவ்வாறு கூறுவர்

1. உலோக மாசு
2. இளக்கி
3. நுரைபடலம்
4. உலோக மண்

128. The chemical change among the following

1. melting of ice
2. burning of coal in air
3. freezing of water
4. heating of hacksaw blade

பின்வருவனவற்றில் வேதி மாற்றம்

1. பனி உருகுதல்
2. நிலக்கரியை காற்றில் எரித்தல்
3. தண்ணீர் உறைதல்
4. அறுக்கும் வாளை (hacksaw blade) சூடாக்குதல்

129. The bond angle of $NH_3$ molecule is

$NH_3$ மூலக்கூறின் பிணைப்பு கோணம்

1. 120°
2. 180°
3. 107°48'
4. 104°31'

130. A solution contains 40g of common salt in 320g of water.Then its concentration in terms of mass by mass percentage of the solution is

1. 10.1%
2. 10 g.
3. 11.1 g
4. 11.1%

ஒரு கரைசலானது 320 கிராம் நீரில் 40 கிராம் சாதாரண உப்பைக் கொண்டுள்ளது எனில் நிறை – நிறை சதவீதத்தில் அந்த கரைசலின் செறிவு

1. 10.1%
2. 10 கிராம்
3. 11.1 கிராம்
4. 11.1%

131. The natural fiber among the following

1. wool
2. nylon
3. PVC
4. polythene

கீழ்க்கண்டவற்றில் இயற்கை இழை

1. கம்பளி
2. நைலான்
3. பி.வி.சி
4. பாலிதீன்

132. Select the correct answer indicating the increasing order of the following fuels on the basis of their calorific values

i. LPG

ii. Diesel

iii. Wood

iv. Hydrogen

பின்வரும் எரிப்பொருட்களின் கலோரி மதிப்பை அடிப்படையாக கொண்டு, ஏறுவரிசையைக் குறிக்கும் சரியான பதிலை தேர்ந்தெடுக்கவும்.

i. எல்.பி.ஜி

ii. டீசல்

iii. மரக்கட்டை

iv. ஹைட்ரஜன்

1. i, ii, iii, iv
2. iii, ii, i, iv
3. iv, iii, ii, i
4. ii, iii, i, iv

133. Correct match among the following

| Group A | Group B |
|---|---|
| i) Biotin | a) Beri beri |
| ii) Tocoferol | b) Nervous disorders |
| iii) Niacin | c) Fertility disorders |
| iv) Thiamin | d) Pellagra |

கீழ்க்கண்டவற்றை சரியாக ஜோடி சேர்த்திடு

| குழு A | குழு B |
|---|---|
| i) பயோடின் | a) பெரி பெரி |
| ii) டோகோபெரல் | b) நரம்புத் தளர்ச்சி |
| iii) நியாசின் | c) மலட்டுத்தன்மை |
| iv) தையமின் | d) பெல்லாக்ரா |

1. i-a, ii-b, iii-c, iv-d
2. i-b, ii-c, iii-d, iv-a
3. i-c, ii-d, iii-a, iv-b
4. i-d, ii-a, iii-b, iv-c

134. The first sharp sound of the heart “LUB” is produced due to

1. closing of tricuspid and bicuspid valves
2. closing of pulmonary and systemic valves
3. closing of tricuspid and pulmonary valves
4. closing of bicuspid and systemic valves

இதயத்திலிருந்து முதலில் ஏற்படும் “லப்” என்ற ஒலிக்கு காரணம்

1. மூவிதழ் வால்வுகளும், ஈரிதழ் வால்வுகளும் மூடுவதால்
2. நுரையீரல் தமனி வால்வுகளும், மகாதமனி வால்வுகளும் மூடுவதால்
3. மூவிதழ் வால்வுகளும், நுரையீரல் தமனி வால்வுகளும் மூடுவதால்
4. ஈரிதழ் வால்வுகளும், மகாதமனி வால்வுகளும் மூடுவதால்

135. Lichen is an example for

1. Parasite
2. Insectivore
3. Saprotroph
4. Symbiont

லைக்கன்கள் இதற்கு உதாரணம்

1. ஒட்டுண்ணி
2. பூச்சியுண்ணுபவை
3. சாறுண்ணிகள்
4. கூட்டுயிரி வாழ்விகள்

136. ‘Body building foods’ among the following

1. rice and wheat
2. milk and fish
3. groundnuts and til
4. papaya and mango

கீழ்க்கண்டவற்றில் “உடல் கட்டமைப்பிற்கான உணவு”

1. அரிசி மற்றும் கோதுமை
2. பால் மற்றும் மீன்
3. வேர்கடலை மற்றும் எள்
4. பப்பாளி மற்றும் மாங்காய்

137. The phase of cell cycle in which cell organelles divide

1. G1 phase
2. S phase
3. G2 phase
4. M phase

செல் சுழற்சியின் போது, செல் உறுப்புகள் பிரியும் நிலை

1. G1 நிலை
2. S நிலை
3. G2 நிலை
4. M நிலை

138. Antibiotics are not effective against

1. typhoid
2. cholera
3. tuberculosis
4. small pox

எதிர் உயிரிகள் இவற்றின் மீது திறம்பட செயல் புரியாது

1. டைபாய்டு
2. காலரா
3. காசநோய்
4. பெரியம்மை

139. The odd one with respect to marine fisheries

1. Sardines
2. Silver carp
3. Bombay duck
4. Mackerel

கடல் மீன் பிடிப்பு தொழிலில் பொருந்தாத ஒன்று

1. சார்டின்ஸ்
2. வெள்ளிக்கெண்டை
3. பாம்பே டக்
4. மாக்ரெல்

140. The concept of "Ecological pyramids" was first introduced by

1. Charles Lyell
2. Charles Darwin
3. August Weismann
4. Charles Elton

"சூழலியல் பிரமீடு" என்ற கருத்தியலை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர்

1. சார்லஸ் லைல்
2. சார்லஸ் டார்வின்
3. ஆகஸ்ட் வெய்ஸ்மன்
4. சார்லஸ் எல்டன்

141. Cone shaped trees with sloping branches are normally seen in

1. deserts
2. grass lands
3. mountain regions
4. plains

சரிவுநிலை கிளைகளையுடைய கூம்பு வடிவ மரங்கள் பொதுவாக இங்கு காணப்படும்

1. பாலைவனம்
2. புல்வெளி நிலம்
3. மலைப்பகுதி
4. சமவெளிப்பகுதி

142. Incorrect statement from the following

1. Chromosomes are composed of DNA and proteins.
2. DNA contains the information necessary for constructing cells.
3. Functional segments of DNA are genes.
4. DNA is present only in the nucleus of the cell.

கீழ்க்கண்டவற்றில் தவறான கூற்று

1. குரோமோசோம்கள், DNA மற்றும் புரதத்தால் ஆன அமைப்பு
2. செல் உருவாவதற்கு தேவையான தகவல்களை DNA பெற்றுள்ளது
3. DNA விலுள்ள செயலாற்றும் பகுதியை ஜீன்கள் என்பர்.
4. DNA செல்லின் உட்கருவில் மட்டுமே அமைந்திருக்கும்

143. Assertion (A): Many young people get acne on the face during puberty.

Reason (R): During puberty, the secretion of sweat glands and sebaceous glands increases.

Correct statement based on above assertion and reason.

1. A correct; R incorrect
2. A incorrect; R correct
3. A and R both correct; R is the correct explanation for A
4. A and R both correct; R is not the correct explanation for A

கூற்று (A): பருவமடையும் காலங்களில் பெரும்பாலான இளம் வயதினர்க்கு முகத்தில் சிறுகட்டிகள் (முகப்பருக்கள்) அமைந்திருக்கும்

காரணம் (R): பருவமடையும் காலங்களில் எண்ணெய் மற்றும் வியர்வை சுரப்பிகள் அதிகமாக சுரக்கிறது

மேற்கண்ட கூற்று மற்றும் காரணத்தை அடிப்படையாக கொண்ட சரியான விளக்கம்

1. A சரி, R தவறு
2. A தவறு , R சரி
3. A மற்றும் R இரண்டும் சரி; R என்பது A க்கு சரியான விளக்கம்
4. A மற்றும் R இரண்டும் சரி; R என்பது A க்கு சரியான விளக்கம் அல்ல

144. These seeds disperse through air

1. Drumstick
2. Xanthium
3. Castor
4. Balsam

இந்த விதைகள் காற்றின் மூலம் பரவும்

1. முருங்கை
2. சாந்தியம்
3. ஆமணக்கு
4. பால்சம்

145. The first and foremost skill required for the scientific experiment

1. estimation
2. observation
3. conducting experiment
4. measuring

அறிவியல் பரிசோதனைக்கு தேவையான முதல் மற்றும் மிக முக்கியமான திறன்

1. கணித்தல்
2. உற்றுநோக்குதல்
3. பரிசோதனை நடத்துதல்
4. அளவிடுதல்

146. The last step in the Psychomotor domain

1. Imitation
2. Precision
3. Manipulation
4. Naturalisation

உள இயக்க களத்தின் இறுதிப் படிநிலை

1. போலச் செய்தல்
2. துல்லியத் தன்மை
3. கையாளுதல்
4. இயல்பாக்குதல்

147. Which of the following is not an Academic standard as per the State Curriculum Framework - 2011

1. Conceptual understanding
2. Creativity
3. Information skills and projects
4. Concern to bio diversity

2011 மாநில பாடத்திட்ட வடிவமைப்பின் படி, கீழ்க்கண்டவற்றில் கல்வித்தரம் அல்லாதது எது?

1. பாடக்கருத்தை புரிந்துக்கொள்ளுதல்
2. ஆக்கத்திறன்
3. தகவல் திறன் மற்றும் செயல்திட்டங்கள்
4. உயிர் பன்மத்தின் மீது அக்கறை

148. “Student gives reasons for water pollution.” – Instructional objective of this specification

1. Knowledge
2. Understanding
3. Application
4. Skill

“மாணவர் நீர் மாசடைவதற்கான காரணத்தை கூறுகிறான்’’ - எனும் சிறப்புநோக்கத்தின் கற்றல் நோக்கம்

1. அறிவு
2. புரிந்துக்கொள்ளுதல்
3. பயன்படுத்ததல்
4. திறன்

149. According to Kilpatrick classification – “Project on collection of plants and animal products and parts” is a type of

1. Productive project
2. Utilization project
3. Problem project
4. Training project

கில்பாட்ரிக் வகைப்பாட்டின் படி, “தாவரம், விலங்கு உற்பத்திப் பொருட்கள், பாகங்களை சேகரித்தல் மீதான செயல்திட்டம்’’- இவ்வகையை சேர்ந்தது

1. உற்பத்தி செயல்திட்டம்
2. பயன்பாட்டு செயல்திட்டம்
3. பிரச்சினை செயல்திட்டம்
4. பயிற்சி செயல்திட்டம்

150. Learning percentage through smell

**வாசனை மூலம் ஏற்படும் கற்றல் சதவீதம்**

1. 11%
2. 3.5%
3. 1.5%
4. 1.0 %